REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 5உ வெள்ளி (18—3—55) ★ ★ வெளியீடு: பங்குனி 6உ சனி (19—3—55) [இதழ் 236

தலைமன்னாரில் பட்டினிப் போர்!

10 பேர் மருத்துவ மனையில்!

இந்தியாவுக்கு தங்களைத் திருப்பி அனுப்புவதில் தாமதம் செய்து, நீண்ட நாட்கள் தலைமன்னாரிலேயே தங்க வைத்திருப்பதை எதிர்த்து, சென்ற வாரம் உண்ணாவிரதம் மேற்கொண்ட 15 பேர்களில் 10 பேருடைய நிலைமை மோசமாகிவிட்டதாகவும், அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாயும் தெரிகிறது,

எஞ்சிய 5 பேர்களில் 4 பேர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு விட்டதாயும், ஒருவர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாயும் இலங்கை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

முருங்கை மரத்தில் மீண்டும் வேதாளம்!

சட்டசபைத் துறை - செயல்முறைக்கு சீட்டா?

கம்யூனிஸ்டு கட்சியின் புதிய 'பழைய போர்க்கோலம்'!

ஆந்திராவில் பெற்ற தோல்வியின் எதிரொலியா?

ஐதராபாத் முதன் மந்திரியின் தகவல்

ஐதராபாத், மார்ச் 15—

"கம்யூனிஸ்டு கட்சி, மக்கள் ஜனநாயக முன்னணி, தொடர்புடைய பிற கட்சிகளைச் சேர்ந்த சிலர், சென்ற மூன்று ஆண்டுகளாகக் கையாண்டுவரும் சட்டசபைத் துறை நடவடிக்கைகளுக்கு முழுக்குப் போட்டுவிட்டு வேறு செயல் முறையைக் கையாளப்போகின்றனர் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது."

—இத்தகவலை ஐதராபாத் முதல் மந்திரி சட்டசபையில் வெளியிட்டுள்ளார்.

இதைக் கேள்விப்பட்டதும், எதிர்க்கட்சித் தலைவரான கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த வி. டி. தேஷ்பாண்டே, ஆத்திரம் கொண்டவராகக் கீழ்வருமாறு குறிப்பிட்டார்:—

"மூன்று ஆண்டுகள் வரை 35,000 ஆயுதந்தரித்த சிப்பாய்களுடன் போரிட்ட கம்யூனிஸ்டு கட்சி, இன்னும் எத்தகைய நிலைமையையும் தாங்கிக்கொள்ளும் திறம் படைத்துள்ளது."

இப்பேச்சைக் கேட்ட முதல் மந்திரி, "எதிர்க்கட்சித் தலைவரின் அச்சுறுத்தல், வரவிருக்கும் சம்பவத்தை முன்கூட்டி அறிவிக்கும் அறிவிப்பாக இருக்குமானால், மாநில அரசாங்கம் மட்டுமே அல்லாது இந்தியப் பேரரசும் மிகு மிகு விழிப்பாக இருக்கும்" என்று எச்சரித்தார்.

காமாம் மாவட்டத்தின் சில சிற்றூர்களில் கம்யூனிஸ்டு கட்சியினர் மீண்டும் பலாத்கார செயல்களில் ஈடுபட்டு வருவதாக உள்ளூர் செய்தி ஸ்தாபனம் ஒன்று தகவல் கொடுத்திருக்கிறது. அதற்கு அரசாங்கம் பொருள் உதவி தருவதாகவும், அத்தகு உதவி செய்யக்கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சேபித்தார்.

"அந்தச் செய்தி ஸ்தாபனம் கொடுத்துள்ள தகவல், போதிய ஆதாரமற்றது அல்ல," என முதல் மந்திரி பதில் கொடுத்துள்ளார்.

காங்கிரசில் பிளவு மேலும் நீடிக்கிறது!

நாட்டு முன்னேற்றத்திற்கு நாசம்விளைவிக்கிறது

டில்லி காங்கிரஸ் அமைச்சர் குழுவின் பரிதாபம்

நான்காவது ஆண்டில் நுழைய இருக்கிற டில்லி மாநில காங்கிரஸ் அரசாங்கத்தில், சட்டசபை காங்கிரஸ் கட்சிக்குள் இன்றும் தனி நபர் மனமாச்சரியங்கள் நீடித்து நிலைத்து இருக்கின்றன.

ஏற்கனவே முதல் மந்திரியாக இருந்துவந்த பிரேம் பிரகாஷை விலக்கிவிட்டு, குருமுக் நிஹால் சிங் முதன் மந்திரியாக்கப்பட்டார். இம்மாறுதல் செய்துவிடுவதால் டில்லி காங்கிர[ஸ்] கட்சியின் உள்ளடி பதவிப் போராட்டம் தீர்ந்துவிடும் எனக் காங்கிரஸ் மேலிடம் நம்பிக்கொண்டிருந்தது.

அந்நம்பிக்கையை சிதறடித்துவிட்டது, காங்கிரஸ் அமைச்சர் குழுவில் இன்றும் கூர்மையாகிக் கொண்டுவரும் உட்பகை! இவ்வுண்மையை புதிய முதல் அமைச்சரே ஒளிவு மறைவு இல்லாமல் வாய்விட்டுக் கூறிவிட்டார்.

காங்கிரஸ் கட்சியிடம் இருந்து வரும் பதவிப் போட்டியும், அமைச்சர் குழுவில் நிலைத்திருக்கும் உட்பகையும், நாட்டின் முன்னேற்றத்திற்கு நாசம் விளைவிக்கிறது என்பது மறுக்கமுடியாததாகும். இப்பொழுது நடைபெற்றுவரும் சட்டசபை கூட்டத்திற்கு முன்புவரையில் ஒரு மசோதாவும் சட்டமாக நிறைவேற்றப் படாததிலிருந்தே, காங்கிரஸ் கட்சிக்குள்ளிருக்கும் பிளவின் காரணமாக நாடு எவ்வகையில் நலிகிறது என்பதை நன்கு உணர்ந்துகொள்ள முடியும்.

சாதிப் பள்ளிகள்

சர்க்கார் உதவி இழக்கின்றன

பம்பாய், மார்ச் 16—

பம்பாய் அரசாங்கம், இனி, சாதி வகுப்பு பள்ளிகளுக்கு உதவி செய்வதை நிறுத்திக்கொள்ளும் என்று தெரிகிறது.

அந்தப் பள்ளிகள் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் கூட, ஏற்கனவே அவை, சர்க்காரிடமிருந்து எவ்வித மானியத் தொகையும் பெறவில்லை. இனி, அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்படும் 'பிராவிடண்ட்' நிதிக்கு, சர்க்கார், பங்கு தராது என்றும் தெரிகிறது.

இலவசக் கல்வி

போபால் மாநிலத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும், உயர்தர ஆரம்பக் கல்வி இலவசமாகத் தருவது என்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக, முதன் மந்திரி டாக்டர் எஸ். டி. சர்மா, சட்டசபையில், வரவு-செலவுத் திட்டத்தை தாக்கல் செய்யும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டின் நிலை

மக்கள் சபையில் அவினாசிலிங்கம்

புதுடில்லி, மார்ச் 17—

"தென்னாட்டைச் சேர்ந்த சென்னை, மைசூர், திரு-கொச்சி, ஆந்திரா, ஐதராபாத் ஆகிய ஐந்து மாநிலங்களிலும் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை, ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த அளவைக் காட்டிலும் குறைவானதாகும்."

"திட்டத்தை நிறைவேற்றுவதில் எதிர்பார்க்கப்படுகிற தங்கள் பங்குகளைச் செலுத்தவும் இந்த மாநிலங்களால் முடியாதிருக்கிறது; தங்கள் பங்குச் செலவுத் தொகையை தாங்கள் தர இயலாதனவாயிருப்பதால், இந்த மாநிலங்கள், கல்வி பரப்புதல், மற்றும், நாட்டின் இதர முன்னேற்றக் காரியங்களுக்காக மத்திய அரசாங்கம் தரும் உதவியையும் பயன்படுத்திக்கொள்ள முடியாதனவாயிருக்கின்றன; எனவே, மத்திய அரசாங்கம், இதுபற்றி பரிசீலித்து, தங்கள் பங்குச் செலவை சரிக்கட்ட, போதுமான பொருளாதார வசதிகளைப் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்தாக வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்,"

—என்று, சென்னை மாநில முன்னாள் கல்வி மந்திரியும், இன்றைய மக்கள் சபையில் காங்கிரஸ் உறுப்பினருமான திரு. டி. எஸ் அவினாசிலிங்கம் செட்டியார், மக்கள் சபையில் வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

சட்டசபையை அவமதித்ததாக - வினோபா மீது குற்றச்சாட்டு!

ஒரிசா சட்ட சபையில் பிரச்சினை

புவனேஸ்வரம், மார்ச் 16—

"'பூதானத்திற்காக ஆறில் ஒரு பங்கு நிலம் தந்தால், சட்டசபையில் வந்துள்ள ஒரிசா விவசாயிகள் நிவாரண மசோதாவைக் கைவிடுமாறு செய்கிறேன்,' என்ற ஆச்சாரியா வினோபா பாவேயின் அறிக்கை இந்தச் சபையை அவமதிப்பதாகும்,"

என்று, ஒரிசா சட்டசபையில் அரிகரதாஸ் என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அந்த மசோதா, சபையின் பரிசீலனையிலிருப்பதுடன், ஒரு பொறுக்குக் குழுவின் விசாரணையிலுமிருக்கிறது.

சபைத் தலைவர்என். கே தாஸ், இந்த முக்கியமான பிரச்சினை குறித்து 18-ந் தேதியன்று தன் முடிவை அறிவிப்பதாகக் கூறியிருக்கிறாராம்.

இந்தியாவில் - டெலிவிஷன்

ஜபல்பூர், மார்ச் 17—

இங்குள்ள சர்க்கார் இஞ்சினியரிங் கல்லூரியில், இந்தியாவிலேயே முதன் முதலாக 'டெலிவிஷன்' கருவியை, மத்திய பிரதேச கவர்னர் டாக்டர் பட்டாபி சீதாராமையா முடுக்கிவிட்டார்.

பட்டதாரிகளுக்கு நடைமுறைப் பயிற்சி தருவதற்காக இந்த டெலிவிஷன் கருவி நிறுவப்பட்டுள்ளது.

ம. சோ. கட்சி செயலற்றுவிட்டது!

தலைவர்களின் பிணக்கே காரணம்

ம சோ. கட்சியில் வெகு சீக்கிரத்திலேயே மகத்தான வெளியேறும் படலங்கள் நிகழும் என்று தெரிய வருவதாக செய்தி வெளியாகியுள்ளது.

ஜே பி. கிருபளானி, திருமதி கிருபளானி உள்ளிட்ட பல முக்கியமான சொல்வாக்கு மிகுந்த தலைவர்கள் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறி காங்கிரசில் சேருவர் என்று கூறப்படுகிறது.

கட்சியின் முன்னணித் தலைவர்களின் போக்கால் கட்சி செயலற்று விட்டதாகவும் கட்சியில் உள்ள தோழர்கள்கருதுகின்றனர்.

தலைவர்களிடை தோன்றியுள்ள இந்தப் பிளவை இனியும் நீண்ட நாட்களுக்கு 'ஒட்டுப் போட்டு' வைத்திருக்க இயலாது என்றும் கூறப்படுகிறது.

'எங்களுக்களிக்கும் உதவி பணமாக இருக்கட்டும்'

பிச்சை புகுவோரின் மிரட்டல் கோரிக்கை

சட்டசபைக்கு அருகில் 700 அகதிகள் அட்டகாசம்

ஒரு மணி நேரமாக அடம் பிடித்து வெற்றி பெற்றனர்

கல்கத்தா, மார்ச் 17—

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய 700 அகதிகள், தாங்கள் தங்கி இருந்த ஒரிசா தங்குமிடங்களைவிட்டு வெளியேறி, கல்கத்தா சட்டசபைமுன் ஆர்ப்பாட்டம் செய்ய ஊர்வலமாகச் சென்றனர். சட்டசபைக்கு அருகில் உள்ள பாதையில், மேலும் அவர்களைச் செல்லவிடாமல் போலீஸ் வழிமறித்துவிட்டது.

அகதிகளும் முன்னுக்கும் செல்லாமல், பின்னுக்கும் திரும்பாமல், பாதையிலேயே உட்கார்ந்துகொண்டனர். மீண்டும் தங்க வசதியும், கொடுக்கப்படும் உதவியைப் பணமாகக் கொடுக்கக் கோரியும் அகதிகள் அட்டகாசம் செய்தனர்.

அகதிகள் மறுவாழ்விற்கான ரூ. 9 கோடி மானிய கோரிக்கைப் பற்றி சட்ட சபையில் விவாதம் நடைபெறுக் கொண்டிருந்தது. அதே நேரத்தில்தான் மேற்படி அகதிகள் அட்டகாசமும் நிகழ்ந்தது.

அகதிகள் எங்கிருந்து வெளியேறி வந்தார்களோ அதே ஒரிசாவிற்கு அவர்கள் மறுபடியும் திரும்பிச் செல்லவேண்டுமென்றும், அவர்களுக்கு பயிர் செய்ய நிலமும் மற்ற வசதிகளும் செய்து தரப்படும் என்றும் அரசாங்க சார்பில் உறுதி கூறப்பட்டது.

அதன் பிறகு ஒரு மணி நேரத்திற்கு அதிகமாக பாதையில் அடம் பிடித்துக்கொண்டிருந்த அகதிகள் கலைந்து சென்றனர்.

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 18—3—55 வெள்ளி

கண்டன நாள்!

'ஏக இந்தியா'வில்—ஏற்றத் தாழ்வுகள் ஏன்? வடநாடு வளம் பெற்று வாழ்வுறும் போது தென்னாடு மட்டும் வறுமையுற்று தாழ்வுறுவானேன்?

'ஏக இந்தியா'வில் — வடநாட்டில் மட்டும் வான் முகட்டை முட்டும் தொழிற்சாலைகள் நிரம்புவதாயும், தென்னாடு—வறண்டு, வளமிழந்து வரும் வயல் வெளி நிரம்பியதாயும் இருப்பானேன்?

'ஏக இந்தியா'வில் — வடநாட்டவர் ஆள்பவராகவும், தென்னாட்டவர் ஆளப்படுபவர்களாகவும் இருப்பானேன்?

'ஏக இந்தியா'வில் — வடநாட்டு ஆட்சிப் பீடம் அதிகாரங்கள் மிகுந்ததாயும், தென்னாட்டு ஆட்சி பீடம் 'வரி வசூலி'க்கும் அதிகாரம் மட்டும் கொண்டதாயுமிருப்பானேன்?

'ஏக இந்தியா'வில் — வடநாட்டு மக்கள் மட்டும் தமது உற்றார் உறவினருடன், தான் பிறந்த மாநிலத்திலேயே வாழ வசதியும், வளமும் பெற்று வாழ்வாங்கு வாழும்போது, தென்னாட்டவர்மட்டும் சொந்த நாட்டில் வாழ வழியற்று—கப்பலேறி கடல் கடந்து — வேற்று நாடு சென்று-தேயிலை, ரப்பர் தோட்டங்களில் குருதியைக் காசாக்கி, கண்ணீர் வடித்துழலும் கூலிகளாய் வாழ்வானேன்?

'ஏக இந்தியா'வில்—வறுமை என்றால் மட்டும் தெற்கேயும், வளமை என்றால் வடக்கேயும் இடம் பெறுவானேன்?

'ஏக இந்தியா'வில் -வடக்கு வலியதாயிருக்கும்போது, தெற்கு மட்டும் எதற்கெடுத்தாலும் தெண்டனிட்டு, கைகட்டி, வாய் பொத்தி சேவகம் புரியவுமான நிலையில் இருப்பானேன்?

'ஏக இந்தியா'வில்—வர்த்தகமும், வாணிபமும் வடநாட்டவருக்கு மட்டுமே—வெள்ளையரின் வாரிசாக அமைவானேன்?

'ஏக இந்தியா'வில்—வடவருக்கு, தெற்கில் வரவேற்பும், வாழ்த்தும், மதிப்பும் கிட்டும் போது, தென்னவர், வடக்கில் கேட்பாரற்றவராய், கேலிக்குரியவராய் ஆக்கப்படுவானேன்?

இதுபோன்ற இன்னும் எத்தனையோ வேறுபாடான காரண காரியங்களைக் காட்டி, 'ஏக இந்தியா' என்ற பெயரால், வடநாட்டுடன் தென்னாடு ஒட்டிக்கொண்டிருப்பதால், தென்னாட்டிற்கு என்ன இலாபம்—நஷ்டத்தைத் தவிர —என்ற நமது கேள்விகளுக்கு தெளிவான பதில் இன்னமும் எவராலும் தரப்படவில்லை.

'வடநாடு-தென்னாடு என்று பிரித்துப் பேசாதீர்' என்று உபதேசித்தவர்கள் — உரத்த குரலில் உத்திரவிட்டவர்கள் - பேசுகிறார்கள்—பேசி வருகிறார்கள்—'ஏக இந்தியா'வில் 'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது,'—என்ற பொருள்பட!

"வரிகளில் பெரும் பகுதியை வாரிச் செல்கிறார்கள்; வறுமை வாட்டுகிறது" என்றுகூறி கடன் கேட்டால் 'பொறுமையாயிரு' என்று உபதேசம் புரிகிறார்களே—அவர்கள் யார் நம்மை ஆள்வதற்கு?

"செழித்த வர்த்தகமும், கொழுத்த வாணிபமும் உங்களிடம் இருக்கின்றன; இந்த நாட்டில் ஏராளமான பொருளைச் சம்பாதிக்கிறீர்கள்; எங்களுக்குத் தேவையானபோது நீங்கள் உதவாவிடின், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கோரிக்கையில் உண்மையிருப்பதாக நான் நம்பவேண்டிவரும்."

"வளரும் வரிகள் அவர்களுக்கு—வஜா செய்யும் வரிகள் நமக்கு; கறவை மாடுகள் அவர்களுக்கு—தொத்தல் மாடுகள் நமக்கு; நான் என்ன செய்வேன்—கடன் கேட்பதைத் தவிர!"

இவை எல்லாம், சென்னை மாநில முதன் மந்திரிகளாயிருந்த ஓமந்தூரார், ஆச்சாரியார் போன்ற 'ஏக இந்தியா' காங்கிரஸ்காரர்கள், ஆட்சிப் பொறுப்பில் பெற்ற அனுபவத்திலிருந்து வெளியிட்ட வேதனையான கருத்துக்களாகும். திராவிடர் தனி இனத்தவர்; பல்கலைச் செறிவும், பண்பட்ட வாழ்வும் பெற்றிருந்தவர்கள்; நாடாண்ட பரம்பரையினர்; என்றுமே வடவர்க்கு அடிமைகளாயிருந்தில்லாத அவர்கள், இன்று மட்டும் ஏன் வடவரின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டும்?

'ஏக இந்தியா' என்ற பெயரால், வடவர், தென்னாட்டவரின் வாழ்வு, வளம், செல்வம், உழைப்பு, உரிமை அத்தனையையும் சுரண்டிச் செல்வதை தென்னாட்டவர் ஏன் அனுமதிக்க வேண்டும்?

"ஒரு இனத்தை வாட்டி, மற்றொரு இனம் வாழ்வு பெறுவதை உலக வரலாறு சரியென்று ஒப்புக்கொண்டுள்ளதா?"—என்ற நியாயமான கேள்விக்கு நேர்மையான பதில்தான், "எங்களின் நலன் பேண, நாட்டு விடுதலை காண, நிரந்தர நல்வாழ்வு பெற போராடப் புறப்பட்டுவிட்டோம்," என்ற திராவிடரின் உரிமைக் குரல்—இலட்சிய கீதம்—'திராவிட நாடு திராவிடருக்கே' என்பது!

"திராவிடம், வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாலன்றி மானத்தோடு வாழ முடியாது"—என்பதற்கான காரணங்களை தி. மு. கழகம், சமூக, பொருளாதார—அரசியல் ரீதியாக எடுத்து விளக்கிவந்திருக்கிறது.

'ஐந்தாண்டுத் திட்டம்' என்ற அழிவிருத்தித் திட்டமொன்றை, இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் தீட்டி, கடந்த நான்காண்டு காலமாக நிறைவேற்றி வரும் டெல்லி மத்திய ஆட்சி, பெரும் பெரும் நீர்ப்பாசன, மின்சார, தொழில் வளர்ச்சித் திட்டங்கள், ஆராய்ச்சிக்கூடங்கள், தொழில் நுட்பப் பயிற்சி சாலைகள் முதலியவற்றை விந்தியத்திற்கு வடக்கேயே நிறுவி, தென்னாட்டின் வளர்ச்சிக்கு எந்தவித வழியும் செய்யாது விடுத்த வஞ்சகச் செயல் — ஏகாதிபத்தியப் போக்கு — கைப்புண்ணுக்கு, உள்ளங்கை நெல்லிக்கனியாக, குன்றின் மேலிட்ட தீபமாக விளங்குகிறது! ஒளிர்கிறது!!

ஆவடி மாநாட்டு வரவேற்பு மேடையும், பெரியநாய்க்கன் பாளையத்தில் நடைபெற்ற ஐந்தாண்டுத் திட்ட விவாத அரங்கும் இதற்குச் சான்றுபகரும்!

வடநாட்டவரின் இந்த பகிரங்கமான வஞ்சகம்—'திராவிடம் ஏன் தனி நாடாக வேண்டும்'—என்பதற்கு, ஏற்கனவே நாம் காட்டிவந்திருக்கிற ஆயிரம் காரணங்களுடன் ஆயிரத்தோராவது காரணமாக அமைந்திருக்கிறது.

நாட்டு மக்கள்—திராவிடர்கள் எழுச்சியுறவும், வடநாட்டு வர்த்தகச் சீமான்களும் — வாணிபக் கோமான்களும்— 'நாட்டின் நாயகர்'களும்— நாடாளத் துடிக்கும் நாணமிலித 'ஏக இந்திய'க் கட்சியினரும்— அந்தக் காரணத்தைப் புரிந்து கொள்ளும் வகையில், தமிழ் நாடெங்கும் மார்ச் 20-ந் தேதியன்று, 'ஐந்தாண்டுத் திட்டக் கண்டனக் குரல்' எழுப்பப்படவிருக்கிறது—பேரூர் பொதுக் குழுவின் முடிவின்படி!

கழகத் தோழர்கள், 'ஐந்தாண்டுத் திட்டத்தை ஏன் கண்டிக்கிறோம்?' என்பதற்கான விளக்கங்களைத் தந்து காரியமாற்றுவார்களாக!

ஐந்து பேர் கொண்ட குடும்பம்

ஆரோக்கியமாக வாழ ஆண்டுதோறும் ரூ. 3,000 தேவை

"ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு தேகாரோக்கியத்துடன், நியாயமான வாழ்க்கை வசதிகளுடன் வாழ, ஆண்டுதோறும் ரூ. 3,000 தேவை" என்று, அகில இந்திய கதர் கைத்தறி போர்டின் திட்டப் பிரிவு மதிப்பிட்டுள்ளது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை திட்டக் குழு தீட்டுமுன், அதன் பரிசிலனைக்கு கதர் போர்டு இதுபற்றிய தனது அறிக்கையை தாக்கல் செய்யும் என்று தெரிய வருகிறது.

இப்போது சராசரியாக ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ 1,320 என்றும் அந்த போர்டு மதிப்பிட்டுள்ளதாம்.

தொழிலாளருக்கு வீட்டு வசதி

கோவை, மார்ச் 16—

இந்திய சர்க்காரின் தொழிலாளர் குடியிருப்பு வசதித் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக, கோவையிலுள்ள இரண்டு பெரிய ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கட்கு, ஆலை நிர்வாகங்கள் வீடுகள் கட்டித் தரும் சங்கங்களை அமைத்துள்ளனவாம்.

வீடொன்றுக்கு ரூ. 2,700 செலவில் 300 வீடுகள் பிளமேட்டில் கட்டித் தரப்படுமென்றும், இவை 'பி' ரகத்தைச் சேர்ந்தவைகளாக இருக்குமென்றும் கூறப்படுகிறது. சென்னை மாநிலத்திலேயே முதலாவதாக உள்ள இத்திட்டம், இவ்வாண்டு இறுதிக்குள்ளாகவே முடிவடைந்துவிடுமென்றும் சொல்லப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்காகும் செலவில் 50 சதவிகிதத் தொகையை இந்திய சர்க்கார் நீண்டகால கடனாகத் தந்து 25 ஆண்டுகளுக்குள் திருப்பித்தரப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் ஒப்புதல் தந்துள்ளதெனவும், மேலும் 25 சதவிகிதத்தை மானியமாகத் தர சம்மதித்துள்ளதாகவும் தெரிகிறது

பாக்கி 25 சதவிகிதத்தையும் தொழிலாளர்களே தர வேண்டியிருக்குமெனவும், அந்த 25 சதவிகிதத் தொகையையும் தர முடியாத நிலையிலுள்ள தொழிலாளர்கட்குக் கடன் தந்து உதவ அவ்விரு ஆலை நிர்வாகிகளும் முன் வந்துள்ளனரெனவும் கூறப்படுகிறது.

'இருதயம் எங்கள்பால்! ஆதரவோ அவர்கள்பால்!'

'சிலவற்றில் கூட்டியும்-குறைத்தும் மதிப்பிட்டுக் கொண்டோம்!'

ஆந்திர கம்யூனிஸ்டு கட்சியின் அறிக்கை.

"காங்கிரஸ் மந்திரிசபை வீழ்ந்ததும், மக்கள் காட்டிய—அதுவரை இல்லாத அளவு உற்சாகம், கம்யூனிஸ்டு கட்சி தேர்தல் பிரச்சாரத்தின்போது மக்கள் காட்டிய உள்ளுணர்வு, கம்யூனிஸ்டு கட்சிக்கே வாக்களிப்பதாக அவர்கள் தந்த உறுதி மொழி ஆகியவை 'மக்கள், காங்கிரசுக்கு அடுத்தபடியாக கம்யூனிசத்தைத்தான் ஆதரிக்கிறார்கள்,' என்று கம்யூனிஸ்டு கட்சியை நம்பச்செய்தன;

"இரண்டு கோடி ஆந்திரர்களில் பெரும்பாலானோர் கம்யூனிஸ்டு கட்சியை ஆதரித்தார்கள் என்று கம்யூனிஸ்டு கட்சி சொல்லவில்லை; ஆனால், 100 அல்லது 110 தொகுதிகளில் 55 முதல் 60 சதவிகித இடங்களில் வாக்காளர்கள் கம்யூனிஸ்டுகளையே ஆதரித்தார்கள் என்றும், அவர்கள் நிச்சயம் கம்யூனிஸ்டு கட்சி அபேட்சகர்களுக்கே வாக்களிப்பார்கள் என்றும் கட்சி நிச்சயமாக எண்ணியது;

"காங்கிரஸ் முன்னணி, அரசியல் ரீதியாக மதிப்பிழந்திருப்பதாகவே மக்கள் கருதினர். அவர்கள் அதே நேரத்தில், கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் கொள்கையையும், திட்டத்தையும் பாராட்டுபவர்களாகவே இருந்தனர்; பின் எங்குதான் நாம் தவறினோம்?

"நாம், காங்கிரஸ் முன்னணியின் மக்கள் விரோத அரசியல் கொள்கையையும், பெரும்பாலான மக்கள் நமது கட்சிமீது காட்டிய அரசியல் அனுதாபத்தையும் மட்டுமே கணக்கிலெடுத்துக் கொண்டோம்; இப்போதுள்ள சமூக அமைப்பில், முதலாளிகள்—நிலப்பிரபுக்கள் ஆகியோரின் பிடிப்பினை குறைத்து மதிப்பிட்டுவிட்டோம்;

"இப்போதுள்ள சமூக அமைப்புக்கு ஆபத்து நெருங்கும்போது, அந்த முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ வர்க்கங்கள் தங்கள் சக்திகளை ஒன்று திரட்டிக் கொள்வதற்குள்ள அவர்களது ஆற்றலை குறைவாக நாம் மதிப்பிட்டுவிட்டோம்;

"நாம் மக்களின் அரசியல் தெளிவையும் உறுதிப்பாட்டையும் அதிகமாக மதிப்பிட்டுவிட்டோம்,"

இவ்வாறு ஆந்திர கம்யூனிஸ்டு கட்சி, 'தேர்தலில் ஏன் தோற்றோம்?' என்பது பற்றி அலசி ஆராய்ந்து கண்டுபிடித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

மேலும் அந்த அறிக்கையில் காணப்படுவதாவது:—

"ஆந்திராவில் உள்ள மத்தியதர வர்க்கத்தினர், 'காங்கிரஸ் மந்திரி சபையை தவறான பாதையில் செல்லவிடாமல் தடுத்து நிறுத்துகிற நல்ல உபயோகமுள்ள ஒரு எதிர்க்கட்சியாகவே கம்யூனிஸ்டு கட்சி இருக்கவேண்டும்,' என்று விரும்பி யிருக்கின்றனர்; ஆனால், கம்யூனிஸ்டு கட்சியை ஆட்சியில் அமர்த்த வாக்களிப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை என்று தெரிகிறது."

'தாங்கள் 100 முதல் 110 இடங்கள் வரை கைப்பற்றப்போவதாக அறிவித்திருந்தபடி ஏன் முடியவில்லை?' என்பதைப்பற்றி ஆராய்ந்தறிய, கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டம் கடந்த 10-ந் தேதி முதல் நடைபெற்றது

அதன் பிறகு வெளியான அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:

"ஏற்கனவே கம்யூனிஸ்டுகளுக்கு வாக்களிக்க முடிவு செய்திருந்த 10 முதல் 15 சதவிகித வாக்காளர்களின் மனதை மாற்றிக் கொள்ளச் செய்த நிர்பந்தத்தில் நிலப்பிரபுக்களின் கோஷ்டிகள் வெற்றியடைந்துவிட்டன"

"அந்த வாக்காளர்களின் மனம் எங்களையே நாடுகிறதுஎன்றாலும், எங்களுக்கு எதிராகவே வாக்களித்திருக்கிறார்கள்."

கம்யூனிஸ்டு கட்சி மீது வீண் பழிகளைச் சுமத்தியதாகவும், புளுகியதாகவும், காங்கிரஸ் பிரச்சாரகர்களையும், பத்திரிகைகளையும் கம்யூனிஸ்டு கட்சி கண்டித்துள்ளது.

சமாதானத் தூதுவர்களின் சாமான்கள் பறிபோயின!

துணிமணிகளுக்கு பதில் கல்லும் மண்ணும் கிடந்தன!

சைகோன், மார்ச் 15—

இந்தோ-சீன போர் நிறுத்த ஒப்பந்தத்தை அமுல் நடத்த நிறுவப்பட்ட சர்வதேச மேற்பார்வைக் குழுவில் உள்ள இந்திய உறுப்பினர்கள், தாங்கள் ஏழு மாதங்கள் முன் கல்கத்தாவிலிருந்து இந்தோ-சீனாவுக்குப் புறப்படுகையில், தங்கள் சாமான்களையெல்லாம்—பெருவாரியாகத் துணிமணிகளை—ஒரு வியாபாரக் கப்பலில் இந்தோ-சீனாவுக்கு எடுத்துவரப்படுவதற்காக கல்கத்தா துறைமுகத்தில் விட்டுச் சென்றனர்

அண்மையில்தான் அந்த பார்சல்கள் அவர்களுக்குச் சேர்ந்தன; ஆனால், தாங்கள் பத்திரமாகப் பெட்டியில் வைத்திருந்த ஆடை அணிகளுக்குப் பதிலாக மண்ணும், கல்லும் மட்டுமே பெட்டிக்குள் காணப்பட்டதாம். சில பெட்டிகளில் இந்திய சர்க்கார் அலுவலக அட்டைகளும், காகிதங்களும் இருந்தனவாம்.

இதுபற்றி அந்த இந்திய உறுப்பினர்கள் புகார் செய்துள்ளது மட்டுமன்றி, தாங்கள் இழந்துவிட்ட பொருள்களுக்கு நஷ்டஈடு கோரி, ஒரு அதிகாரியை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளனர் என்றும் தெரிகிறது.

காரைக்குடியில் ஒரு மருத்துவக் கல்லூரி

சென்னை, மார்ச் 16—

டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார் அவர்கள் நிதி உதவி செய்வதாகக் கொடுத்த வாக்குறுதியின்பேரில், மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்குத் தகுதியான இடம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்கென நியமிக்கப்பட்டிருந்த குழு காரைக்குடியில் அக்கல்லூரி அமைப்பது நல்லதென்று தெரிவித்திருக்கிறது.

இதுபற்றிய குழுவின் அறிக்கை இன்னும் சர்க்காருக்குக் கிடைக்கவில்லை என்றும், காரைக்குடியை தேர்ந்தெடுப்பதை சர்க்கார் அங்கீகாரம் செய்யுமானல் அங்கு ஆரம்ப முதற்கொண்டே சகல கட்டிடங்களையும் கட்டவேண்டி நேரிடும் என்றும், 450 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனை ஒன்றுடன், 50 மாணவர்கள் பயிற்சிக்கான கல்லூரி ஒன்றையும் கட்ட வேண்டியதாக இருக்குமெனவும் அமைச்சர் ஏ. பி. ஷெட்டி கூறினர்.

மேற்கண்டவைகளுக்காக மொத்தம் 90 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும், இத்தொகையில் ஒரு பகுதியை டாக்டர் அழகப்பச் செட்டியார் ஏற்றுக் கொள்வதுடன், கட்டிடம் கட்டுவதற்கான இடவசதியும் செய்வார் என்றும், செலவுத் தொகையில் பாக்கித் தொகையைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமெனவும், இந்தச் செலவில் பெரும் பகுதியை மத்திய சர்க்கார் கொடுத்து உதவும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறினர்.

மேலும் அவர், மத்திய சர்க்கார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இக்கல்லூரிக்கென நிதி உதவி ஒதுக்கும் என்று நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

'மன்மத' ஆண்டில் மண விழா!

வடநாட்டவருக்குத் தடை; தென்னட்டவருக்கு அல்லவாம்!

ஒரு சோதிடர் தரும் புராண விளக்கம்

"அடுத்த தமிழ் ஆண்டான 'மன்மத' ஆண்டில், திருமணங்கள் நடத்தலாமா வென்று விளக்கங் கேட்டு பலர் எழுதியுள்ளனர்; ஏனெனில் அந்த ஆண்டில், குரு, சிம்மராசியிலிருப்பதாலும், அதிலும் குறிப்பாக சிம்மராசியை குரு பற்றியிருப்பதாலும் பலருக்கு சந்தேகம் எழும்பியுள்ளது;

"இந்த விதிக்கு ஒரு விலக்கு தரப்பட்டிருக்கிறது—'காலாமிர்தம்' என்ற சோதிட நூலின்மூன்றாம் 'பிந்து'வில் 59, 60-வது பக்கங்களில் உள்ள 55-வது சுலோகத்தில்;

"மன்மத வருடத்தில் திருமணம் நடைபெறக் கூடாது என்ற தடை, விந்தியமலைக்கு அப்பால் உள்ளவர்களுக்குத் தான் பொருந்தும்; அதற்குத் தெற்கே வாழும் தென்னட்டு மக்களுக்கு பொருந்தாது"

என்று சென்னையிலிருந்து 'ஜோதிர் பூஷண பண்டிட்' ஏ எஸ். சௌமிய நாராயணன் என்பவர் 'இந்து' மார்ச் 15-ந் தேதி இதழில், ஆசிரியருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறர்.

பெண்கள் போலீஸ் படை

மைசூர் மாநிலத்தில் பெண்கள் போலீஸ் படை ஒன்று ஏற்படுத்தும் யோசனையை சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருவதாக மைசூர் மாநில சட்ட சபையில், அமைச்சர் சித்த வீரப்பா தெரிவித்திருக்கிறர். அது தவிர, யபாலீஸ் அதிகாரிகளின் ஊதியத்தை உயர்த்தும் விஷயத்தையும் சர்க்கார் கவனிக்குமென்றும் தெரிவித்தார்.

மேலும் அவர், இப்போது மைசூர் மாநில முழுமையிலும் 7300 பேருக்கு மேற்பட்ட போலீசார் குடியிருப்பு வசதிகள் பெருமல் இருக்கிறர்களெனவும், இந்திய சர்க்காருடைய உதவியுடன் இவர்களுக்கெல்லாம் குடியிருப்பு வசதிகள் செய்து தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறியிருக்கிறர்.

இன்னுமென்ன செய்யப் போறீங்க?

நாகர்கோவில், வடிவீஸ்வரம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் தேரோட்ட உற்சவத் தினத்தன்று, பார்ப்பனரல்லாத பணக்காரர்களின் கூட்டு முறையில் உள்ள ஒரு நிறுவனமான 'வெள்ளித் தாம்பாள மகமை'யின் சார்பில், ஆயிரத்திற்கு மேற்பட்ட பார்ப்பனர்கட்கு சாப்பாடு போட வேண்டுமென்றுள்ள வழக்கத்திற்கு மாருக, சென்ற ஆண்டில் பார்ப்பனரல்லாத பிறரும், தங்களுக்கும் சாப்பாடு தரப்பட வேண்டும் என்று கூறி பந்தியில் உட்கார்ந்தனர். ஆத்திரங்கொண்ட பார்ப்பனர்கள் போலீசாரின் உதவியுடன் அவர்களைத் துரத்தியதோடு அதன் விளைவாக பலரும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாண்டிலும், சென்ற 4-ந் தேதியன்று நடைபெற்ற அத்திருவிழாவின் போது, இதுமாதிரி நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறக் கூடாதெனக் கருதிய தேவஸ்வம் போர்டு உறுப்பினர் திரு. டி. வேலு என்பவர், எல்லோருக்குமே கஞ்சி கொடுக்கும்படி உத்தரவிட்டிருக்கிறர்.

இதை எதிர்த்து வடிவீஸ்வரம் பார்ப்பனர்கள், டி. வி. கிருஷ்ணய்யர் என்பவர் தலைமையில் ஒன்று திரண்டு, திரு டி வேலுவிடம் சென்று, மகமையிலிருந்து தேரோட்ட தினத்தன்று வழக்கமாகப் பார்ப்பனருக்குச் செய்ய வேண்டிய 'சத்தி' முறையாக நடத்தப்பட வேண்டுமென கூறிக் கொண்டிருந்தபோது, இடையில் ஏ நீலகண்ட ஐயர் என்பவர் குறுக்கிட்டு, வழக்கப்படி அந்தச் 'சத்தி' முறை நடைபெற்ருக வேண்டுமென்றும், இல்லையேல் கோர்ட்டில் வழக்கு தொடுக்கப்படுமென்றும் கூறினராம் உடனே போர்டு உறுப்பினர் டி. வேலு அவர்கள், அவ்வாறு, அவரால் செய்து கொள்ள முடியுமானல் செய்து கொள்ளட்டும் என்றும், என்ன வானலும் இவ்வாண்டில் எல்லோருக்கும் கஞ்சி தந்துவிட்டால் போதுமென்றும் கூறவே, பின்னர் இருவருக்குமிடையே வாக்குவாதங்கள் நடைபெற்றதாகவும் தெரிகிறது. (ந. நி.)

சென்னை—சூளை நகர இளைஞர் கழகம்

13—3—55-ல் நடைபெற்ற மேற்படி கழகப் பொதுக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—தலைவர்: இராமச்சந்திரன்; துணைத் தலைவர்கள்: செ. மி. பரிபூரணம், ஏ. பி. பாலசுப்பிரமணியம், டி. ஆர். பார்த்தசாரதி, பொதுச் செயலாளர்: இரா. சக்கரவர்த்தி; பொருளாளர்: மா. சண்முகம். மற்றும் 4 பேர் செயலாளர்களாகவும், 7 பேர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொத்தனூர் வெற்றிலைத் தொழிலாளர் சங்கம்

11—3—55 மாலை பொத்தனூர் வள்ளுவர் நிலையத்தில், தோழர் ஓ எம். கந்தசாமி தலைமையில் நடைபெற்ற சங்கச் செயற்குழுக் கூட்டத்தில், வெற்றிலை விற்பனை வரியை ரத்து செய்தது குறித்து, அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தும், மேற்படி சங்கத் தூதுக் குழுவில் கலந்துகொண்ட சட்டசபை உறுப்பினர்களுக்கும், மற்றும் சில தோழர்கட்கும் நன்றி தெரிவித்தும், வெற்றிலைக் காய்ச்சலினல் வேலையற்றிருக்கும் வெற்றிலைத் தொழிலாளர்களுக்கு பேட்டை வாய்த்தலையில் அமைக்கவிருக்கும் சர்க்கரை ஆலையில் வேலை வாங்கித் தரும்படி அரசாங்கத்தைக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருமத்தூர் கிராமப் பொதுநல சீர்திருத்தகழகம்

பெ. த. அத்தியூரில், 5—3—55 இரவு 7 மணிக்கு கிராமப் பொது நல சீர்திருத்தக் கழகத்தின் ஆதரவில், தோழர் கே. தங்கவேலு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில், தோழர் கே. தங்கவேலு 'கிராம முன்னேற்றத்திற்கான திட்டங்கள்' என்னும் பொருள் குறித்து பேசினர். கூட்ட முடிவில் இந்த வட்டார கிராமங்களுக்கு நீர்ப்பாசனத்திற்கு வாய்க்கால் வசதி செய்துதர வேண்டுமெனவும், தற்பொழுது உழவர்கள் மீது அதிகப்படியாக விதிக்கப்பட்டுள்ள வரியாகிய இரண்டணவை நீக்கும்படியும், மாவட்ட அதிகாரிகள், இந்த வட்டாரத்திற்கு வந்து மக்களின் குறைபாட்டை அறிந்து ஆவன செய்ய வேண்டுமாயும் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ் எழுத்தாளர் சங்கம்

13—3—55-ல், கம்பத்தில், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம் தோழர் ம. பொ. சிவஞானம் தலைமையில் நடைபெற்றபோது, தமிழ் எழுத்தாளர் உதவி நிதிக்கு ரூ. 500 நன்கொடையளித்த சென்னை கவர்னருக்கு நன்றி தெரிவித்தும், தோழியர் ஈ. த. ராஜேஸ்வரி அம்மையாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், சங்கத்தின் செயலாளர் தோழர் ப. கோதண்டராமன் விலகுதலை ஏற்றும் முடிவு செய்யப்பட்டதுடன், தோழர்கள் க. சோமசுந்தரம் செயலாளராகவும், அப்துல் வஹாப் துணைச் செயலாளராகவும், கே. பி. பாலசுப்ரமண்யம் விளம்பரச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செய்திச் சுருள்

கல்லக்குடி—நடராசன் நினைவுப் படிப்பகம்

11—3—55 இரவு 10-30 மணியளவில் தோழர் ப. அழகுராசன் தலைமையில் நடைபெற்ற படிப்பக உறுப்பினர்கள் கூட்டத்தில் புதிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: அ. குருசாமி; துணைச் செயலாளர்: சி. இரத்தினம்; பொருளாளர்: ப. அழகுராசன்; விளம்பர உறுப்பினர்: கா. பொ. பாண்டியன்; செயற்குழு உறுப்பினர்களாக 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் பல அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வேலூரில் பொதுக்கூட்டம்

5—3—55 மாலை 6 மணிக்கு வேலூர் வ. உ. சி. திடலில், தோழர் இரா. இரத்தினசபாபதி தலைமையில் அண்ணு மன்றச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் டி. பி. மூர்த்தி, வி. கே. இராசு, டி. ஆர். முத்து, வி. ஏ. இலக்குமணன் ஆகியோர் பல தலைப்புகளில் பேசிய பின், தோழியர் சத்தியவாணி முத்து 'பெண்கள் முன்னேற்றம்' எனும் தலைப்பில் விரிவுரையாற்றினர்.

கண்ணமங்கலத்தில் பொதுக்கூட்டம்

28—2—55 மாலை 5 மணிக்கு கண்ணமங்கலத்தில், மாவட்டக் கலெக்டர் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆ. மணிஎழிலன் கலெக்டரையும், டி. எஸ். பி. யையும் வரவேற்றுப் பேசினர். கலெக்டருக்கு கண்ணமங்கலம் பஞ்சாயத்துக்குழு சார்பில், வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம், கிராம முன்னேற்றம் ஆகியவை பற்றி கலெக்டர் தமது உரையில் குறிப்பிட்டார். பல தனிப்பட்டோர் சார்பில் அவரிடம் மஜுர்கள் தரப்பட்டன.

சிறப்புச் சொற்போர்

4—3—55 மாலை 5 மணியளவில், அண்ணமலை பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில், தோழர் பி. சந்திரசேகரன் தலைமையில் ஒரு சிறப்புச் சொற்போர் கூட்டம் நடைபெற்றது. தோழர் க. அறிவழகன், பி. ஏ (ஹான்ஸ்) 'கலை கலைக்காகவே அன்று; கலை வாழ்க்கைக்காகவே' என்ற தீர்மானத்தை முன் மொழிந்து, 'கலை கலைக்காகவே' என்று கூறப்படும் தத்துவத்தின் பொய்க் கோட்பாட்டை விளக்கிக் கூறினர்.

தீர்மானத்தை எதிர்த்துத் தோழர்கள் கலியபெருமாள், அரங்கராசன், தோழியர் கமலா ஆகியோரும், தீர்மானத்தை ஆதரித்துத் தோழர்கள் வெள்ளையன், ஆறுமுகம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் தீர்மானம், மிகப் பெரும்பாலான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றது. (ந-நி)

வேண்டுகோள்

"'மனேன்மணி' நாடகம் இயற்றிப் பெரும் புகழடைந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தோன்றி, வருகிற ஏப்ரல் திங்கள் 4-ந் தேதியன்று நூற்றாண்டு முடிவடைகின்றது; தமிழ்மக்கள் அவரை வாழ்த்தும்முகத்தான் பாராட்டு விழா நடத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்," என்று நாகர் கோவில், வடசேரி 'மனேன்மணி சுந்தரனுர் மன்ற'த்தின் செயலாளர் ச. கிருஷ்ணதாஸ் கேட்டுக் கொள்கிறர்.

ரூ. 50 லட்சம் பெறுமான கைத்தறி துணி மீண்டும் தேக்கம்

சென்னை, மார்ச் 16—

விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக்கும் சில ரக கைத்தறித் துணிகளின் விற்பனை விலையைக் குறைத்து, அதனல் ஏற்படுகின்ற நஷ்டத்திற்குப் பணம் தந்து உதவி அளிப்பது சர்க்காரின் பரிசீலனையிலிருந்து வருவதாக சென்னை சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறர்.

இப்பிரச்சினை பற்றி சென்னை சர்க்கார், ஏற்கனவே அகில இந்திய கைத்தறிக்குழுவிற்கும், மத்திய சர்க்காருக்கும் எழுதியுள்ளதென்றும், விலையைக் குறைப்பதினல் ஏற்படும் நஷ்டத்தை, கைத்தறி செஸ் நிதியிலிருந்து சரிக்கட்டிக்கொள்வதும் உத்தேசத்திலிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்

இத்திங்கள் 20 முதல் 26-ந் தேதிவரை நடைபெறவிருக்கும் கைத்தறி வார விழாவின்போது கைத்தறித் துணி வாங்குவோருக்கு ரூபாய் ஒன்றுக்கு மேலும் அரை அணு விசேட தள்ளுபடி, சலுகை அளிப்பதென சர்க்கார் தீர்மானித்துள்ளதெனவும் கூறினர்.

மாநிலம் முழுமையிலுமுள்ள மாநில கூட்டுறவுச் சங்கங்களிடம் தற்போது ரூ. 50 லட்சம் பெறுமான கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன என்ற தகவலையும் அவர் சட்டசபையில் தந்திருக்கிறர்.

மேலும், மக்கள் தங்கள் உபயோகத்திற்காக எளிதில் வாங்கக் கூடியதாகவும், சுலபமாக விற்கக் கூடியதுமான சரக்குகளை உற்பத்தி செய்யும்படி நெசவாளர் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும், விற்பனை செய்வதற்குக் கஷ்டப்படும் உபயோகமற்ற கைத்தறித் துணிகளை மேலும் உற்பத்தி செய்ய வேண்டாமென கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அறிவித்திருக்கிறர்.

தனுஷ்கோடி துறைமுகம்

மக்கள் சபையில் கேள்வி

தனுஷ்கோடி துறைமுகத்தை வேறொரு தகுந்த இடத்திற்கு மாற்றுவது பற்றிய பிரச்சினை, தென்பகுதி இரயில்வே நியமித்த நிபுணர் குழுவின் பரிசீலனையிலிருந்து வருவதாக மத்திய சர்க்கார் அமைச்சர் அழகேசன் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறர்.

விரைவிலேயே அக்குழு தனது 'ரிப்போர்ட்டை'ச் சமர்ப்பித்து விடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினர்.

வேடிக்கையல்ல!

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை ஏப்ரல் திங்கள் 21ந் தேதி கூடும் என்று சபைத் தலைவரான மௌல்வி தமீஜுத்தீன் கான் அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

மார்ச் 21-ல் இக்கூட்டம் நடைபெறுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது; ஆனல், 'கவர்னர்-ஜெனரலின் உத்தரவு செல்லுமா, செல்லாதா,' என்ற பிரச்சினை இன்னமும் கோர்ட் விசாரணையில்' இருப்பதால், மேற்படி தினத்தன்று நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக அவரது அறிக்கை ஒன்றில் காணப்பட்டது.

மாவட்ட மருத்துவ மனைகளின் எதிர்காலம்

எஞ்சியுள்ள தாலூகா தலைமை மருத்துவ மனைகளையும், கிராம மருத்துவச் சாவடிகளையும் அரசாங்க சர்வீசுகளில் சேர்ப்பது பற்றி சர்க்கார் ஆலோசனை நடத்தி வருவதாக அமைச்சர் ஷெட்டி தெரிவித்திருக்கிறர். இத்திட்டம் அடுத்த ஆண்டில் நடத்தப்படலாம் என்றும் அவர் கூறியிருக்கிறர்.

இப்போது 27 தாலூகா மருத்துவ நிலையங்களும், 400 கிராம மருத்துவச் சாவடிகளும் ஸ்தல ஸ்தாபனங்களின் கையிலுள்ளன என்றும் அறிவித்திருக்கிறர்.

'ஏக இந்தியா' வாதிகளுக்கு

கட்ச், மார்ச் 16—

கண்ட்லா துறைமுக திட்டத்திற்காக மத்திய அரசாங்கம் ரூ. 400 லட்சம் செலவிடும் என்று மதரிகிறது.

கட்ச் மாநிலத்தில் உள்ள காந்தி தாம் என்ற இடத்தின் அபிவிருத்திக்காகவும், ரூ. 77 லட்சம் மத்திய அரசாங்கம் செலவிடும் என்றும் தெரிகிறது

மாநில அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டப்படி வருமானம் ரூ 45,46,000 என்றாலும், மத்திய அரசாங்கம் மாநில அபிவிருத்தித் திட்டங்களுக்கென்று மொத்தத்தில் ரூ 68½ லட்சம் செலவிடும் என்று தெரிகிறது.

சென்னை ஆரம்பக் கல்விக் குழு

தென்னட்டு மக்கள் சபை உறுப்பினரிடம் கருத்து கேட்கும்

புதுடில்லி, மார்ச் 17—

சென்னை மாநில ஆரம்பக் கல்வி ஆய்வுக் குழுவினர் மார்ச் 20ந்தேதியன்று சென்னையைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்களைச் சந்தித்து சென்னை ஆரம்பக் கல்வி நிலை குறித்துக் கருத்தறிவார்கள் என்று தெரிகிறது.

அடிகளாருக்கு யோகம்!

தூத்துக்குடி, மார்ச் 17—

சென்னை இந்து மத பரிபாலனக் குழுவினர், குன்றக்குடி அடிகள், கிருபானந்தவாரியார், 'தொண்டன்' எனும் பத்திரிகை ஆசிரியர் கே. ஆறுமுக நாவலர், குலசேகரம் பட்டணம் முத்துக் குமாரசாமி, தூத்துக்குடி தமிழ்ப்பண்டிதர் நாராயண அய்யங்கார் ஆகிய ஐவரையும், இந்து மத பிரச்சாரகர்களாக நியமனம் செய்து, எல்லா ஆலயங்களின் நிர்வாகத்தினர்கட்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாம்.

சோற் பயிற்சிக் கூட்டம்

20—3—55 காலை 10 மணிக்கு, சென்னை, முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில் தோழர் ஆ ருக்குமாங்கதன் தலைமையில், 'கட்சியும் குறிக்கோளும்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு

பெங்களூர், மார்ச் 7—

மைசூர் மாநில ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு தருவது பற்றி அரசாங்கம் யோசித்துக்கொண்டிருப்பதாக, கல்வி மந்திரி ஏ. ஜி. இராமச்சந்திர ராவ் சட்ட சபையில் கூறியிருக்கிறார்.

பம்பாய், மார்ச் 18—

இந்தியாவிலேயே மிகப் பெரியதான 'பர்மா ஷெல்' எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இந்தியக் குடியரசு துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் நேற்று துவக்கிவைத்திருக்கிறார்.

சென்னை மாநில ஆரம்பப்பள்ளி மானேஜர்கள், ஆசிரியர் மானேஜர்கள் மாநாடு

"27—3—55-ல், சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி மாநாட்டினைத் திறந்து வைக்க சென்னை முதலமைச்சர் காமராசரும், தலைமை தாங்க டாக்டர் பி. வரதராசுலுவும் இசைவு தந்துள்ளனர்; ஆரம்பக் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள அனைவர்களும், மாவட்ட, தாலுகா மானேஜர் சங்க நிர்வாகிகளும், பொதுமக்களும் தங்கள் ஆலோசனைகளைத் தீர்மானம் மூலமாக முன்கூட்டியே தெரிவிக்க —'பி. வீரராகவன், 94/95 புதுத் தெரு, மண்ணடி' என்ற முகவரிக்கு 22—3—55-க்குள் அனுப்பும்படி வேண்டுகிறோம்" என்று, சென்னை மாநில ஆசிரியர் சங்க மானேஜர் கன்வீனர்களான பி. வீரராகவன், என். ஏ. நடேசன் ஆகியோர் கேட்டுக்கொள்கின்றனர்.

சென்னை மேல் சபையில்...

★

கேள்விக்குப் பதில்தானே!

ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குப் பெருங் கூட்டம் போகுமாதலால் சர்க்கார் காரியாலய சிப்பந்திகள் காரியாலயங்களுக்கு வருவதற்கு பஸ் வசதி கிடைக்காது என்பதற்காகவும், அன்று,யூகோ ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ சென்னைக்கு வருகை தர்தமையால் அவருக்கு அளிக்கப்பட்ட அரசாங்க ஊர்வலத்தின் காரணமாக போக்குவரத்து நிலைமையை உத்தேசித்தும் தான், அன்று சர்க்கார் காரியாலயங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டது என்று அமைச்சர் பக்தவத்சலம் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார். இந்த விடுமுறை தினத்தை ஈடுகட்ட, காரியாலய விடுமுறை தினமாகிய மார்ச் 19-ந் தேதியன்று முழுநேர வேலை நாளாகக் கப்படுமென்றும் கூறினார்.

"மற்ற அரசியல் கட்சிகள் நடத்தும் மாநாடுகளின்போது இம்மாதிரி விடுமுறைகள் அளிக்கப்படுமா?" என்று கேட்கப்பட்ட போது, அமைச்சர், "அப்போதைய நிலைமையைப் பரிசீலித்து சர்க்கார் முடிவு செய்யும்," என்று தெரிவித்திருக்கிறார்.

அப்படி இல்லையே!

"ஆவடி காங்கிரஸ் மாநாடு முகாமுக்கு சர்க்கார் சாக்கடைக் குழாய்களை வினியோகித்து பொருத்தினரா?" என்று கேட்கப்பட்ட போது, அமைச்சர் ஷெட்டி, 'இல்லை' என்று கூறிவிட்டு, "அம்மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்தவர்கள் தாங்களாகவே அவற்றைச் செய்து கொண்டனர்" என்றும் பதிலிறுத்திருக்கிறார்.

விளையும் அரிசி மதிப்பீடு

இவ்வாண்டுப் பசலியில் (1954–55) சென்னை மாநிலத்தில் 31-லட்சம் டன் அரிசி உற்பத்தி ஆகலாமென்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

ஒரு நபருக்கு 16 அவுன்ஸ் எனும் அடிப்படையில், மாநிலத்தில், மக்களுக்குத் தேவையானது 33·26 லட்சம் டன் அரிசி என்றும், இந்த அடிப்படையை வைத்துக் கணக்கிடுவதானால் 2·23 லட்சம் டன் அரிசி துண்டு விழலாம் என்றும் கூறியிருக்கிறார்.

ஆதரவு தருகிறார்கள்?

கைக்குத்தல் அரிசிக்கு ஆதரவளிப்பதை வரவேற்று, மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்குத் தெரிவித்துள்ளதென்றும், தற்போதைய உத்தேசப்படி, புதிதான அரிசி மில்களுக்கு அனுமதி (லைசென்ஸ்) வழங்கவேண்டாமென்பதே சர்க்காரின் நோக்கம் என்றும் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

முடிவு எப்போது?

சென்னை மெரீனா கடற்கரையில் ஒரு மீன் காட்சிச் சாலை ஏற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளதென்றும், கட்டிடம் நிறுவுவதற்கான இடம் பற்றி இன்னும் முடிவாகவில்லை என்றும், கட்டிடத்திற்குச் செலவாகும் மத்திய மதிப்பீடு இன்னும் தயாராகவில்லை என்றும் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

'பகற் கனவு' அல்லவே!

நெய்வேலியில் மண்பாண்டத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து வருவதோடு, அங்கே ஒரு கண்ணாடி உபீட்டுகள் உற்பத்தி தொழிற்சாலை நிறுவவும் உத்தேசித்துள்ளதென அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

இத்தொழிற்சாலைகள் நிறுவுவது சம்மந்தமான தகவல்கள் முழுவதும் இன்னும் சேகரிக்கப்படவில்லை என்றும், இத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான இடம் பற்றியும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர், 'பிளாஸ்டிக்' அல்லது 'வல்கனைட்' தொழிற்சாலைகள் நிறுவும் பிரச்சினை சர்க்கார் உத்தேசத்திலில்லை என்று கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் பொதுக் கூட்டங்கள்

★

20—3—55 மாலை:

★

சென்னை

சூளை கிளை தி. மு. கழகச் சார்பில், காலை 8-30 மணிக்கு, எண் 17, மாணிக்கச் செட்டி தெருவில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

37-வது வட்ட தி. மு கழகச் சார்பில், மாலை 3 மணிக்கு, இராயப்பேட்டை கழகப் பணிமனையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

42-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், காலை 9 மணிக்கு, திருவல்லிக்கேணி, எண் 4, நமசிவாய முதலி தெருவில், தோழர் பார்த்தசாரதி தலைமையில் நடைபெறும். தோழர்கள் இளம்பரிதி, அன்பரசு, நீலநாராயணன் ஆகியோர் பேசுவர்.

* * *

44-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், காலை 9 மணிக்கு, மைலாப்பூர், எண் 2, அரங்கநாதபுரம் தெருவில், தோழர் ஆர். அறிவழகன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கோ. இளவரசு, வி.குப்புசாமி, எம். இராசு ஆகியோர் பேசுவர்.

★

மதுரை
திலகர் திடலில்
தலைவர்: எஸ். முத்து
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

கோவை
சிதம்பரம் பூங்காவில்
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

திருச்சி
டவுன் ஹால் மைதானத்தில்
தலைவர்: எஸ். ஜி. கிருஷ்ணன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
என். எஸ். இளங்கோ
ஐ. எம். ஷரீப்

★

திருவண்ணாமலை
பேசுவோர்:
காஞ்சி கல்யாணசுந்தரம்
ப. உ. சண்முகம்

★

சேலம்
வீ மார்க்கட்டில்
தலைவர்: ஜி. பி. சோமசுந்தரம்
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

★

திருப்பாலக்குடி
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
ப. நாராயணசாமி

★

குடியேற்றம்
ஆற்றில்
தலைவர்: கு. சி. பொன்னுசாமி
பேசுபவர்:
எம். எஸ். இராமசாமி

★

முடீஸ்வட்டாரம் (வால்பாறை)
பேசுவோர்:
அ. ச. பாலு
க. துரைக்கண்ணன்
க. நெடுஞ்செழியன்

மாயூரம்
கூறைநாடு கடை வீதியில்
தலைவர்: பி. ஏ. சுபகரன்
பேசுவோர்:
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்
டி. ஏ. ராமசாமி

★

போளூர்
பழைய பஸ் நிலையத்தில்
தலைவர்: வி ஏ. நடராசன்
பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
கருத்தோவியன்

★

திருமங்கலம்
பந்தடித் திடலில்
பேசுவோர்:
தில்லை-வில்லாளன்
இரசாக்
பே. பிச்சை

★

நாமக்கல்
திரு. வி. க. பாறையில்
(கே. வி. வி. ஆர். மேடையில்)
பேசுவோர்:
எம். பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ.
கே. பெருமாள்

★

ஈரோடு
காரைவாய்க்கால் மைதானத்தில்
தலைவர்:
எம். சின்னப்பன், எம்.சி.
பேசுவோர்:
சிற்றுளி சுப்பிரமணியம்
ஈ. ஏ. மதார்சா
இரா. பரசுராமன்

★

கவுந்தப்பாடி
பெரியார் மைதானத்தில்
தலைவர்: சோமசுந்தரம்
பேசுபவர்:
ந. இராமசாமி

★

கன்னிவாடி
(தாராபுரம் வட்டம்)
தலைவர்: கன்னிவாடிப் பெரியார்
பேசுவோர்:
கோதை-பொன்னப்பா
கே. வி. ராஜகோபால்

★

கருகம்பத்தூர்
காலை 8 மணிக்கு
பேசுவோர்:
மணிஎழிலன்
இளஞ்செழியன்
பாண்டியன்
கருத்தோவியன்

* * *

விருதம்பட்டு
பேசுவோர்:
கரிகாலன்
மணிஎழிலன்
இளஞ்செழியன்
பாண்டியன்

* * *

வேலூர்
டவுன் மண்டபத்தில்
தலைவர்: கோ. கிருட்டிணன்
பேசுவோர்:
மணிஎழிலன்
க. நெடுஞ்சோழன்
இளஞ்செழியன்
பாண்டியன்

★

குன்னத்தூர்
தேர்த் திடலில்
பேசுவோர்:
கோவை அரசு
க. அன்பரசு

கழகக் கூட்டம்

★

சத்தியவேடு
தி. மு. க. கிளை துவக்க விழா
20—3—55 ஞாயிறு மாலை
தலைவர்:
வி. எஸ். கோவிந்தராசன்
பேசுபவர்:
சத்தியவாணிமுத்து

சேலம் மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு

★

22—3—55 மாலை 2 மணிக்கு, சேலம், 'ரெஸ்ட் ஹவுசி'ல் சேலம் மாவட்ட செயற் குழுக் கூட்டம் நடைபெறும். ஆய்வுக்கு வருபவை: மாவட்ட வரவு-செலவு கணக்குகள். இதுவே கடைசிக் கூட்டமாயிருக்குமாதலால் எல்லா மாவட்டப் பிரதிநிதிகளும் கூட்டத்திற்கு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை 8-வது வார்டு தி. மு. கழக உறுப்பினர்கட்கு

19—3—55 இரவு 8 மணிக்கு, சேலம், செவ்வாய்ப்பேட்டை 8-வது வட்ட தி. மு. கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டம், அப்புச்செட்டித் தெருவிலுள்ள கழகக் கட்டிடத்தில் நடைபெறும். ஆய்வுக்கு வருபவை: 13—3—55 அன்று நடைபெற்ற தி. மு. கழக முதலாம் ஆண்டு விழா வரவு-செலவு கணக்கு பரிசீலனை; மேற்படி கிளை புது தேர்தல் நடத்துதல்.

சைதை தி. மு. கழக (கிளை) பொதுக்குழு உறுப்பினர்கட்கு

20—3—55 மாலை 6½ மணிக்கு, சைதை தி. மு. கழகக் கிளையின் பொதுக் குழுக் கூட்டம், சைதை, சடையப்ப முதலி தெரு, 2-ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்.

சென்னை 26-வது வட்ட தி. மு. கழக பொதுக் குழு உறுப்பினர்கட்கு

20—3—55 காலை 9½ மணிக்கு, சென்னை 26-வது வட்ட தி. மு. கழக (கிளை) பொதுக் குழுக் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். பொதுக் குழுத் தீர்மானத்தைக் குறித்தும், பொதுச் செயலாளர் அறிக்கையைக் குறித்தும் மற்றும் பல முக்கிய விஷயங்களைக் குறித்தும் பேசப்படும்.

சென்னை 37-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

20—3—55 மாலை 4 மணியளவில், சென்னை 37-வது வட்ட தி. மு கழகச் செயற் குழுக் கூட்டம், இராயப்பேட்டை கழகப் பணிமனையில் நடைபெறும்.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

★

மார்ச் 19: ராசப்பய்யன்சாவடி (கீடாமங்கலம்)
20: திருச்சி
21: குரும்பேரி
22: ஜோலார்பேட்டை
23: சீர்காழி
24: புதுப்பாளையம்
25: கல்லக்குடி
26: இராயநல்லூர்
27: கீரம்பூர் (துறையூர்)
28: மாரண்டஅள்ளி
30: திருமழிசை

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ, அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.